## வரையறுக்கப்பட்ட லேக் ஹவுஸ் புறப்பெர்ட்றி டெவலப்மென்ற் (தனியார்) கம்பனி - 2015

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

வரையறுக்கப்பட்ட லேக் ஹவுஸ் புறப்பெர்ட்றி டெவலப்மென்ற் (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கமைய இந்த அறிக்கை வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

---------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. கம்பனியால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

---

### 2.1 அபிப்பிராயம்

---

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரையறுக்கப்பட்ட லேக் ஹவுஸ் புறப்பெர்ட்றி டெவலப்மென்ற் (தனியார்) கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களிற்கான (''எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்'') இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என நாள் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

#### 2.2.1 கம்பனியின் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு

---

1985 இல் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 30 ஆண்டுகள் கடந்திருந்தும் கூட கம்பனியினால் எவ்வித வியாபார நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டில், கம்பனிக்குச் சொந்தமான காசுப்பாய்ச்சலை தோற்றுவிக்கக்கூடிய காணி தாய்க் கம்பனியினால் கொள்வனவு செய்யப்பட்டமை கம்பனியினுடைய தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவில் ஒரு நேரடியான தாக்கத்தினைச் செலுத்துகின்றது.

## 3. நிதிசார் மீளாய்வு

---

### 3.1 நிதிசார் விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகளிலிருந்தான வரிக்கு முன்னரான தேறிய இலாபம் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 1,111,549 உடன் ஒப்பிடும் போது ரூபா 671,014 ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டின் போது நிதிசார் விளைவுகளில் ரூபா 440,535 ஆன பின்னடைவினைச் சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் வட்டி வருமானத்தில் ஒரு குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி ஏற்பட்டமை நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட இந்த பின்னடைவுக்குக் பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---

### 4.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

---

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 14,151,194 பெறுமதியான முதலீட்டை அதன் முதிர்வுக்காலத்திற்கு முன் ரூபா 13,589,486 க்கு விற்பனை செய்தமையினால் ரூபா 561,708 ஆன நட்டமொன்று கம்பனியினால் தாங்கிக் கொள்ளப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது வரிகளினை செலுத்துவதிலுள்ள தாமதம் காரணமாக ரூபா 40,986 ஆன ஒரு தண்டப்பணம் கம்பனியினால் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

## 4.2 முகாமைத்துவப் பலவீனங்கள்

-----------------------------------------------

பல்வேறுபட்ட சொத்து அபிவிருத்தி வியாபாரங்களில் நுழைவதனை நோக்கமாகக் கொண்டு 1985 ஆம் ஆண்டு கம்பனியானது கூட்டிணைக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை அவ் வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2007 ஆகஸ்ட் 01 இல் பணிப்பாளர் சபையின் ஒரு துணிகர செயலாக கம்பனியின் ஆரம்ப நோக்கங்கள் போக்குவரத்து வியாபாரமாக திருத்தியமைக்கப்பட்டது. எவ்வாறாயினும், எவ்வித வியாபாரமும் திட்டமிடப்பட்ட படி ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை.